*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **21 நவம்பர் 2022**

## பத்திரிகை செய்தி

இன்று (21-11-2022) நடைபெற்ற காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 25வது பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்பித்தார். எஸ்.ஆர்.எம் கல்விக் குழுமத்தின் வேந்தர் & நிறுவனத் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். டி. ஆர். பாரிவேந்தர், மற்றும் எஸ்.ஆர்.எம் கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர். ரவி பச்சமுத்து ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

துணைநிலை ஆளுநர் விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- என்னைப் போன்றவர்கள் எல்லாம் இத்தகைய மேடையில் நின்று கொண்டிருக்கிறோம் என்றால் அதற்கு ஆசிரியப் பெருமக்கள்தான் காரணம். அது போல மாணவர்கள் பெற்றோருக்கும் கைதட்டியாக வேண்டும் அவர்கள் பல தியாகங்களை செய்துவிட்டு இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.
- பாரத பிரதமர் புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தும்போது கூறினார், ”என் மாணவர்கள் வகுப்பறையில் முடங்கி விடக் கூடாது. அவர்கள் உலக அரங்குக்கு சென்று பணியாற்ற வேண்டும். அதற்காகத்தான் இது” என்றார். மாணவர்களுக்கு அறிவாற்றல் இருக்கிறது. விவேகானந்தர் சொன்னது போல ஒவ்வொருவரும் பிறக்கும்போது ஒரு ஆற்றலோடு பிறந்திருக்கிறோம். இதை கண்டுபிடிக்க வேண்டியது நம்முடைய கடமை.
- பெண்களும் அதிகம் பட்டம் பெறுகிறார்கள் என்பதற்காக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நாளை முதல் முழு பொறுப்பை உங்கள் தோள்களில்ளை சுமக்க போகிறீர்கள். இதற்கு என்ன செய்யப் போகிறோம் என்று பிரம்மாண்டமாக வாழ்க்கையை திட்டமிட வேண்டும். பாரதி கூறியது போல பெரிதினும் பெரிது கேள். பெரிதாக இந்த வாழ்க்கை வாழ விரும்ப வேண்டும். உலகத்திற்கு வழிகாட்டும் இந்திய தேசத்தில் நாம் பிறந்திருக்கிறோம்.
- கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு நாம் இங்கு கூடியிருக்கிறோம். முகமூடியை களைந்திருக்கிறோம். அதற்கு நாம் எடுத்துக் கொண்ட தடுப்பூசிதான் காரணம். இந்திய தடுப்பூசி என்பதை பெருமையாக சொல்லிக் கொள்கிறேன். பாரத தேசத்தால் தடுப்பூசி தயாரிக்க முடியும். தயாரித்து 150 நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்ய முடியும் என்பதை இந்த விஞ்ஞான உலகத்திற்கு காட்டியது பாரத தேசம். அதற்கு காரணம் படித்த விஞ்ஞானிகள் தான்.
- டெட்டனஸ் தடுப்பூசி 2014 இல் நமது நாட்டுக்கு வருவதற்கு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆனது. அதற்கு முன்பு பல நாடுகளில் கிடைத்துவிட்டது. போலியோ நம் நாட்டிற்கு ஒருவருக்கு 24 ஆண்டுகள் ஆனது. இந்திய மாணவர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் சொல்லிக் கொடுத்து நாம் தடுப்பூசி தயாரித்திருக்கிறோம். உலக அரங்கில் நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒன்று. கொரோனாவால் இந்தியாவில் மக்கள் கொத்துக்கொத்தாக சாகப் போகிறார்கள். மக்கள் நெருக்கமாக வாழகிறார்கள்

என்று சொன்னார்கள். ஆனால் தங்கள் மக்களைகூட காப்பாற்ற முடியாத வளர்ந்த நாட்டிற்கும் தடுப்பூசி தந்ததுதான் இந்த தேசத்தின் பெருமை.

- வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து விட்டு இந்தியாவிற்கு வந்த விவேகானந்தரை கேட்டார்கள். வெளிநாடுகளின் வளர்ச்சி மாட மாளிகைகள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வந்திருக்கிறீர்கள். இன்னும் இந்தியாவை விரும்புகிறீர்களா என்று கேட்டதற்கு, "வெளிநாடுகளுக்கு போவதற்கு முன்பு தேசத்தை விரும்பினேன். வெளிநாடுகளுக்கு சென்று விட்டு வந்த பிறகு இந்த தேசத்தை வணங்குகிறேன்" என்று சொன்னார். விவேகானந்தர் சிகாகோ நகரத்திற்கு போக வழி வகுத்தது தமிழகம்தான். ராமநாதபுரம் ராஜாவுக்கு வந்து அழைப்பை விவேகானந்தருக்கு கொடுத்து அனுப்பியது தமிழர் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும். காசி தமிழ் சங்கமம் என்று காசிக்கும் தமிழுக்கும் இருக்கும் இணைப்பை சொல்லும் மிகப் பிரமாண்டமான நிகழ்ச்சியை பாரதப் பிரதமர் தொடங்கி வைத்திருந்தார்.
- பாரதப் பிரதமரின் முயற்சியினால் உலகத்திலேயே ஸ்டார்ட் அப் தொழில் தொடங்குவதில் மூன்றாவது நாடாக இந்தியா உருவெடுத்திருக்கிறது. 75வது சுதந்திர நாளில் 75 ஆயிரம் தொழில் மையங்கள் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் தொழிலே இல்லாத 550 மாவட்டங்களில் மாவட்டங்களில் தொழில் தொடங்கப்பட்டிருக்கிறது. 2025இல் 5 டிரில்லியன் பொருளாதாரமாக இந்தியா மாறும் என்று பிரதமர் சொல்லும்போது, எட்ட முடியாததை குறிக்கோளாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பிரம்மாண்டமான திட்டத்தை தொடங்குங்கள். அதை நோக்கி பயணம் செய்யுங்கள். அதன் மூலம் வெற்றி பெறுங்கள் என்று சொல்லுகிறார்.
- நீங்கள் வெற்றியாளர்களாக வேண்டும். அப்துல் கலாம் கூறுவது போல தூங்கும் போது வருவது கனவல்ல உங்களை தூங்க விடாமல் செய்வதுதான் கனவு. உலகப் பண்பாட்டில் இன்று உயர்ந்து நிற்கும் திருக்குறளை உலகுக்கு கொடுத்தது தமிழன். அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள். எதெல்லாம் நம்மை தடைசெய்கிறதோ அதை விலக்கி வைக்க வேண்டும். எதெல்லாம் நம்மை ஊக்கப்படுத்துகிறதோ அதை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பெற்றோர்கள் பிரம்மாண்டமான கனவுகளோடு உங்களைப் பிடிக்க வைக்கிறார்கள்.
- இன்றைய இளைஞர்கள் மிகவும் கடுமையாக உழைக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கையில் முன்னேற கடுமையாக உழைக்க வேண்டும். உழைப்பிற்கு குறுக்கு வழி எதுவுமே கிடையாது. சாதனையாளராகத்தான் வாழப் போறேன் என்று திட்டமிட்டு வாழ வேண்டும்.